மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

09.10.2022 ஞாயிற்றுக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

## ஐ.எம்.எப் மற்றும் உலக வங்கியின் வருடாந்த மாநாட்டிற்காக

# இலங்கை பிரதிநிதிகள் குழு பயணம்

அமெரிக்காவின் வொஷிங்டனில் நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதியம்(**IMF**) மற்றும் உலக வங்கியின் வருடாந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது. நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தலைமையிலான 08 பேர் கொண்ட தூதுக் குழு மாநாட்டில் பங்கேற்கவுள்ளது. நிதி அமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட உயர் மட்ட அதிகாரிகள் குழுவொன்று இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளது. நாளை(10) ஆரம்பமாகவுள்ள இந்த மாநாடு எதிர்வரும் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.



மட்டக்களப்பு மாவட்டத்தின் எருவில் இளைஞர் கழகம், உதயநிலா கலைக் கழகம், கண்ணகி விளையாட்டுக் கழகம் என்பன இணைந்து எருவில் பிரதேசத்தில் கொம்புச் சந்தியில் அமைக்கப்பட்ட உழவர் சிலை திறப்பு விழாவானது இன்றைய தினம் கண்ணகி விளையாட்டுக் கழகத்தின் தலைவரும், மண்முனை தென்எருவில் பற்றுப் பிரதேசசபை உறுப்பினருமான இ.வேணுராஜ் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான கோ.கருணாகரம், இரா.சாணக்கியன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். **(படம் : சுமன்)**

# கல்முனை மீனவர்கள்

## காணாமல்போனமை தொடர்பில்

### ஜனாதிபதி செயலாளரை சந்தித்த ஹரீஸ் எம்.பி

**நூருள் /ஹுதா உமர்**



கல்முனை எல்லைக்குட்பட்ட கடற்பரப்பிலிருந்து கடந்த 26.09.2022ம் திகதியன்று மாலை படகில் மீன்பிடிக்க புறப்பட்டு சென்ற மீனவர்கள் காணாமல் போகியுள்ளனர். தகவல் அறிந்த தினத்திலிருந்து அம்மீனவர்களை பாதுகாப்பாக மீட்க பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பல்வேறு முயற்சிகளை உயர்மட்டங்களில் மேற்கொண்டு வருகிறார். அதனடிப்படையில் அம்மீனவர்களின் படகு மாத்தறை தெய்வேந்திரமுனை பகுதியில் இருப்பதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு கடற்படை, அனர்த்த முகாமைத்துவ நிலையம், மீன்பிடி அமைச்சு என்பன இணைந்து தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ள ஆயத்தங்கள் இடம்பெற்று வருகின்றது. இன்று ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து இது தொடர்பிலான தற்போதைய அவசர

02

# தமிழ் உறவுகள் கைது செய்யப்பட்டு 5000 நாட்களுக்கு மேலாக தடுத்து வைப்பு

## சாணக்கியன் எடுத்துரைப்பு

எங்களது தமிழ் உறவுகள் கைதுசெய்யப்பட்டு இதே சட்டத்தின் கீழ் 5000 நாட்களுக்கு மேலாக தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார். புனர்வாழ்வு சட்டம் ஊடாக இந்த நாட்டை சீரழித்த மகிந்த ராஜபக்ஷ குடும்பம் உட்பட இந்த அரசாங்கத்துடன் இணைந்த அனைவரும் புனர்வாழ்வளிக்கப்படவேண்டியவர்கள் எனவும் அவர் கூறியுள்ளார். பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்குமாறு கோரி போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் நிலையில் அதனைவிட மோசமான புனர்வாழ்வளித்தல் சட்டத்தினை கொண்டுவர அரசாங்கம் முற்படுவதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாத தடைச்சட்டம் உட்பட மக்களை வன்முறைக்குள்ளாக்கும் அனைத்து சட்டங்களையும் நீக்குமாறு வலியுறுத்தி நேற்று(சனிக்கிழமை) மாலை மட்டக்களப்பில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் தொழிற்சங்க மக்கள் ஒன்றியம் பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் இணைந்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

02

# பட்டினி வலயங்களில் இலங்கையும் உள்ளடக்கம்

உலகளாவிய ரீதியில் 'பட்டினி வலயங்கள்' என உலக உணவுத்திட்டத்தினால் பெயரிடப்பட்டுள்ள 48 நாடுகளில் இலங்கையும் உள்ளடங்கியிருக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையொன்றின் ஊடாக இவ்விடயம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதுடன் கடந்த 2018 ஆம் ஆண்டிலிருந்து உலகளாவிய ரீதியில் உணவுப்பாதுகாப்பின்மை நிலை உயர்வடைந்துவருவதாக அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 'உக்ரேன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பிற்கு முன்னதாகவே தொடர்ச்சியான காலநிலை மாற்றம் மற்றும் அனர்த்தங்கள், பிராந்திய ரீதியான முரண்பாடுகள், கொரோனா வைரஸ் பரவல் என்பன உணவு உற்பத்தி மற்றும் விநியோகம் ஆகியவற்றில் தாக்கங்களைத் தோற்றுவித்துடன் உணவுப்பொருட்களின் விலையேற்றத்திற்கும் காரணமாக அமைந்தன. இந்நிலைவரம் உக்ரேன் – ரஷ்ய போரை அடுத்து மேலும் தீவிரமடைந்தது. இது குறிப்பாக உணவு மற்றும் உரம் ஆகியவற்றின் விலைகள் பன்மடங்காக அதிகரிப்பதற்கு வழிவகுத்ததுடன் இறக்குமதிகளில் தங்கியிருக்கும் நாடுகள்மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது' என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02




# ரயில்களில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிப்பு

இந்த நாட்களில் ரயில்களில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த சில நாட்களாக, நாட்டின் பல பகுதிகளில், ரயில்களில் பல கொள்ளை சம்பவங்கள் பதிவாகியுள்ளன. பயணிகளை காயப்படுத்தும் வகையில் சில கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸ் மா அதிபர் மற்றும் பாதுகாப்பு தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களின் ஆதரவுடன் அவசர பாதுகாப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ரயில்வே பிரதி பொது முகாமையாளர் வி.எஸ்.பொல்வத்தகே தெரிவித்தார். இதேவேளை, ரயில் மோதியதால் ஸ்தம்பிதமடைந்திருந்த வடக்கு ரயில் வீதியின் போக்குவரத்து வழமைக்கு திரும்பியுள்ளது. காங்கசன்துறையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி சென்ற உத்தர தேவி நகரங்களுக்கு இடையேயான கடுகதி ரயில் நேற்று (08) தம்புத்தேகம மற்றும் செனரத்கம நிலையங்களுக்கு அருகில் தடம்புரண்டது. இதன் காரணமாக நேற்று முதல் அனுராதபுரம் நோக்கி பயணிக்க ஆரம்பித்த ஒடிசி விசேட ரயிலை மஹவ பகுதியில் ரயில்வே அதிகாரிகள் நிறுத்த வேண்டியிருந்தது. அதன்படி, அந்த

02



# வீழ்ச்சியடைந்த நாட்டை கட்டியெழுப்ப அபிவிருத்தி வேலைத்திட்டமொன்று அவசியம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



நாட்டின் வருமானத்தைப் பெருக்கும் வகையில் வரிக் கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டும் என்றும்,அரசாக செலவழிக்கும் போது தேவையை இலக்காகக் கொண்டு செலவழிக்க வேண்டும் எனவும்,அந்த இலக்குகளை எட்டும் விதமாக அது அமையப்பெற வேண்டும் என்றும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,இவ்வாறானதொரு நிலையில் எமது நாட்டுக்கு அபிவிருத்தி வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதே புதிய பிரவேசமாக அமையும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று (8) தெரிவித்தார். எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் எவ்வளவு அழுத்தங்களும் அசௌகரியங்களும் இருந்தாலும் அதை குறைக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்றாலும்,இந்த அரசாங்கத்தில் சமூக பாதுகாப்பு திட்டமொன்று இல்லை எனவும்,ராஜபக்ச குடும்பத்தை பாதுகாத்த வன்னம் அமைச்சுகளை பெருக்கிக் கொள்ளும் பாதுகாப்புத் திட்டமே அவர்களுக்கு உள்ளதாகவும்,தற்போது 38 இராஜாங்க அமைச்சர்கள் உள்ளதாகவும் மேலும் பலர் நியமிக்கப்படவுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டை வங்குரோத்தடையச் செய்த நாமல் ராஜபக்ச பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய பேரவைக்கு நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு,நாட்டின் கொள்கை முன்னுரிமைகளை உருவாக்குவதற்குத் தேவையான குறுகிய கால,மத்திய கால மற்றும் நீண்ட கால திட்டங்களை தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இது நகைப்புக்குரிய விடயம் என்றும்,நாட்டை அழித்த ராஜபக்சவிடமிருந்து தீர்வுகள் காண வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,அவர்கள் மக்களை ஏமாற்றிய வன்னம் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். இது போன்ற அரசியல் மோசடிகளில் அங்கம் வகிக்க ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது ஐக்கிய மக்கள் கூட்டணியோ தயாராக இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் யட்டிநுவர தேர்தல் தொகுதிக் கூட்டம் நேற்று (08) இடம் பெற்றது.இதனை ஐக்கிய மக்கள் சக்தியின் யட்டிநுவர தொகுதி அமைப்பாளர் கெமுனு அபயசுந்தர ஏற்பாடு செய்திருந்ததோடு, இதில் ஏராளமான ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

ரணசிங்க பிரேமதாஸ காலத்தில் இரண்டு உள்ளக கிளர்ச்சிகள்,பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்ட போதும் பொருளாதாரச் சுருக்கம் ஏற்படவில்லை எனவும்,அவர் 200 ஆடைத் தொழிற்சாலைகள் திட்டத்தைத் தொடங்கினார் எனவும்,அதற்கான விமர்சனங்கள் எப்படி இருந்தாலும், தற்போதைய நாட்டின் வருமானம் ஆடைத் தொழிலால் தீர்மானிக்கப்படுவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அகால மரணமடையாமல் இருந்திருந்தால் 500க்கும் மேற்பட்ட ஆடைத் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு எமது நாடு முன்னோக்கிச் சென்று இருக்கும் எனவும் தெரிவித்தார். அத்துடன் சர்வதேச நாணய நிதியத்துடன் பேசப்பட்ட எதையும் இந்த அரசாங்கம் மக்களுக்கு வெளிப்படுத்துவதாக இல்லை எனவும், அவர்கள் தங்களுக்கு நன்மை பயக்கும் பகுதியை மட்டுமே வெளிப்படுத்துகிறார்கள் எனவும்,சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் கடன் மறுசீரமைப்பு திட்டத்தின் பிரகாரம் உள்ளன எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மக்களிடம் பொய் சொல்லாமல் 2.9 பில்லியன் டொலர்களை எமது நாட்டிற்கு பெறத் தேவையான ஆதரவை கேட்டால் அதை வழங்குவதாகவும்,அப்படி இல்லாமல், நாட்டுக்கு பொய் சொல்லி,எங்களிடம் உதவி கேட்டால்,அதற்கு எவ்விதத்திலும் சம்மதிக்கவே மாட்டோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## கல்முனை மீனவர்கள் காணாமல்போனமை தொடர்பில்

நிலைகளை விளக்கிய பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் உடனடியாக தேடுதல் பணியை கூட்ட ஆவண செய்யுமாறு அவரை கேட்டுக்கொண்டார். இதனடிப்படையில் பாதுகாப்பு செயலாளர் மற்றும் கடற்படை தளபதிக்கு உத்தரவை பிறப்பித்த ஜனாதிபதியின் செயலாளர் விசை கூடிய இயந்திர படகுகளை கொண்டு அவசரமாக அம்மீனவர்களை பாதுகாப்பாக மீட்குமாறு அறிவுறுத்தல்களை வழங்கியதாகவும், கடற்படை துரித கெதியில் இயங்கி மீனவர்களை தேடும் பணியில் ஈடுபட்டு வருவதாகவும், விடுமுறை தினமாக இருந்தாலும் கூட அவசர நிலையை கவனத்தில் கொண்டு இன்று அலுவலகத்திற்கு வந்து இந்த பணியை முன்னெடுத்த ஜனாதிபதி செயலாளருக்கு ம், சலிக்காமல் தேடுதல் பணியை முன்னெடுத்து வரும் கடற்படையினருக்கு நன்றிகளை தெரிவிப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார். மேலும் விரைவில் அவர்களை கரைக்கு அழைத்துவரப்படும் என்று நம்பிக்கையும் வெளியிட்டார்.

# வளைகுடா வானம்பாடிகள் அமைப்பின் சாதனையாளர்கள் கௌரவிப்பு



(சுமன்)

வளைகுடா வானம்பாடிகள் அமைப்பின் ஏற்பாட்டில் திருக்கோவில் பிரதேசத்தில் சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு இன்றைய தினம் அமைப்பின் ஆலோசகர் பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கோ.கருணாகரம், இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், திருக்கோவில் பிரதேசசபைத் தவிசாளர் கமல்ராஜ், திருக்கோவில் பிரதேச செயலாளர் கஜேந்திரன் கோரளைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் கி.சேயோன், அமைப்பின் பிரதிநிதிகள், ஆலய நிருவாகிகள், சாதனையாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது திருக்கோவில் பிரதேசத்தில் கல்வி, விளையாட்டு, சமூகசேவை எனப் பலதரப்பட்ட விடயங்களில் சாதனைகளை மேற்கொண்ட மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், சமூகசேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் உறவுகளின் அனுசரணையுடன் செயற்பட்டு வரும் வளைகுடா வானம்பாடிகள் என்னும் அமைப்பானது கிழக்குப் பிராந்தியத்தில் பல்வேறு ஊக்குவிப்புச் செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. அதன் ஒரு அம்சமாக இச்சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரயில்களில் கொள்ளைச்

ரயிலில் இருந்த பயணிகள் அனைவரும் பேருந்துகள் மூலம் அவர்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

## பட்டினி வலயங்களில் இலங்கையும்

இதன்விளைவாகத் தோற்றம்பெற்ற உணவுப் பாதுகாப்பின்மையினால் உலகளாவிய ரீதியில் சுமார் 345 மில்லியன் மக்கள் மிகுந்த அச்சுறுத்தல் நிலைக்கு முகங்கொடுத்திருப்பதாகவும், தினமும் சுமார் 828 மில்லியன் மக்கள் பசியுடன் உறங்கச்செல்வதாகவும் உலக உணவுத்திட்டம் கவலை வெளியிட்டுள்ளது. உணவுப்பாதுகாப்பின்மை என்பது உலகளாவிய ரீதியில் ஓர் முக்கிய பிரச்சினையாக மாறியுள்ள நிலையில், அதன்விளைவாக 48 நாடுகள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலான நாடுகள் குறைந்த வருமானம் பெறும் நாடுகளாகக் காணப்படுவதுடன் இறக்குமதிகளுக்கான உக்ரேன் மற்றும் ரஷ்யாவிடம் பெருமளவிற்குத் தங்கியிருக்கும் நாடுகளாகவும் உள்ளன என்று உலக உணவுத்திட்டம் சுட்டிக்காட்டியிருப்பதுடன் அந்த 48 நாடுகளில் ஒன்றாக இலங்கையும் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியா பரிசுத்த திரித்துவ தேசிய கல்லூரி தேசிய மட்டத்திற்கு தெரிவு



தலவாக்கலை பி.கேதீஸ்

நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரி நாடக போட்டியிலும் நடன போட்டியிலும் தேசிய மடட்டத்திற்கு தெரிவாகியுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான மத்திய மாகாண தமிழ் மொழி தின போட்டி நிகழ்வுகள் நேற்று ( 8) சனிக்கிழமை கம்பளை சாஹிரா கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரி திறந்த நாடகப் பிரிவிலும் தனி நடன ஐந்தாம் பிரிவிலும் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளது. தனி நடன ஐந்தாம் பிரிவு போட்டியில் கீர்த்தனா என்ற மாணவி மத்திய மாகாணத்தில் முதலாம் இடத்தைப்பெற்று தேசிய நடன ஐந்தாம் பிரிவு போட்டியில் பங்குபற்ற தகுதி பெற்றுள்ளார். இதேவேளை தனி நடன ஐந்தாம் பிரிவில் இதே கல்லூரியை சேர்ந்த பவதாரணி மூற்றாம் இடத்தை பெற்றதும் குறிப்பிடதக்கது. தொடர்ச்சியாக நாடகத் துறையில் பிரபல்யமாகி தற்போது வளர்ந்து வரும் பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரியின் நாடகப் பிரிவு மேலும் பல சாதனைகளை புரிந்து தேசிய மட்டத்திலும் மலையகத்துக்கு பெருமை சேர்க்க வேண்டும் என பாடசாலை சமூகம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

# மாகாணத்தில் மூன்று முதலிடங்களைப்பெற்ற மட்டக்களப்பு மேற்கு பெண் மாணவிகள்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகள திறனாய்வுப் போட்டியில் இதுவரை மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் மூன்று முதலிடங்களையும், நான்கு இரண்டாம் இடங்களையும் ஒன்பது மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளது. குறித்த போட்டிகள் திருகோணமலை மாவட்டத்தில் தற்போது நடைபெற்று வருகின்றன. குறித்த வலயத்திற்குட்பட்ட பாவற்கொடிச்சேனை பாடசாலை மாணவி எஸ். தவேந்தினி 5000மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலிடத்தையும், கன்னன்குடா மகா வித்தியாலய மாணவி பி.துலான்சலி முப்பாய்ச்சல் போட்டியில் முதலிடத்தினையும், பன்குடாவெளி மாணவி பி.தவதர்சினி பரிதி வட்டம் வீசுதலில் முதலிடத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறித்த போட்டிகளில் பெண்மாணவர்களே முதலிடங்களை வலயத்திற்கு பெற்றுக்கொடுத்துள்ளமை எடுத்துக்காட்டத்தக்கது.

# அபகரிப்புக்குள்ளான பொதுமக்களின் காணிகள் தொடர்பில் ஆராய்வு



(ரக்ஸனா)

கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட நிலப்பறிப்புக்களால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை மீட்டெடுக்கும் முயற்சிகளில் தமது அமைப்பு கரிசனை கொண்டுள்ளதாக மனித எழுச்சி அமைப்பின் பணிப்பாளர் கே. நிஹால் அஹமட் தெரவித்தார். இது தொடர்பில் ஏற்கெனவே அம்பாறை மாவட்டத்தில் செயற்பட்டு வரும் மனித எழுச்சி அமைப்பு தற்போது தமது நடவடிக்கைகளை கிழக்கு மாகாணம் தழுவியதாக மட்டக்களறப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கும் விஸ்தரித்துள்ளதாக அவர் கூறினார்.

அதனடிப்படையில் சனி ஞாயிறு வார இறுதி நாட்களில் மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் காணிகளைப் பறிகொடுத்தோரையும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து காணிகளை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டது. இந்தச் சந்திப்புக்களில் மனித எழுச்சி அமைப்பின் பணிப்பாளர், அதன் திட்ட இணைப்பாளர் எஸ். ஆப்தீன், நிருவாக செயற்பாட்டாளர் எம்.ஐ. உதுமாலெப்பை, ஏறாவூர் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளரும் பொது நிறுவனங்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவருமான எம்.எல். அப்துல் லத்தீப், மூதூர் பிரதேச சபைத் தலைவர் எம்.எம்.ஏ. அறூஸ், மூதூர் காணிகளைப் பறிகொடுத்தோர் அமைப்பின் பிரதிநிதிகள், தோப்பூர் விவசாயிகள் சம்மேளன அங்கத்தவர்கள் உள்ளிட்ட செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர். இந்தச் சந்திப்புக்களில் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளமை பற்றியும் அவற்றை மீட்பதற்கான முன்னெடுப்புக்களில் கடந்து வந்த பாதை பற்றியும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. திட்டமிட்ட நிலப்பறிப்புக்களால் தாம் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக காணிகளைப் பறிகொடுத்தோர் சந்திப்புக்களில் அதிருப்தி வெளியிட்டனர்.

## தமிழ் உறவுகள் கைது செய்யப்பட்டு

பயங்கரவாத தடை சட்டம் மற்றும் அனைத்துவித வன்முறை சட்டங்களையும் உடனடியாக நீக்கக் கோரியும், போராட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைத்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் தொழிற்சங்க மக்கள் ஒன்றியம், பொது அமைப்புக்கள் என்பன இணைந்து இந்த போராட்டத்தினை முன்னெடுத்திருந்தன. மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டமானது பேரணியாக கல்முனை வீதியூடாக கல்லடிப்பாலம் விளையாட்டு மைதானத்தினை அடைந்து அங்கு பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், “இந்த பயங்கரவாத தடைச்சட்டம் என்பது கடந்த 40வருடங்களாக தமிழ் பேசும் மக்களை அடக்கியாண்ட சட்டமாகும். 2019ஆம் ஆண்டு தொடக்கம் இந்த சட்டத்தின் மூலம் இஸ்லாமிய மக்களும் அடக்கப்பட்டார்கள். 2022ஆம் ஆண்டு இந்த சட்டத்தின் மூலம் சிங்கள மக்களையும் கைதுசெய்து அடக்குமுறைகளை முன்னெடுத்தனர். தமிழ் பேசும் மக்களாகிய நாங்கள் இந்த சட்டம் மிக மோசமான சட்டம் இந்த சட்டத்தினை நீக்கவேண்டும். இந்த சட்டத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு அநீதிகள் நடக்கின்றது என்றபோது ஒரு சிலர் பார்வையாளராகயிருந்தாலும் கூட இன்று பெரும்பான்மை சமூகத்திற்கு எதிராக அது பயன்படுத்தப்படும்போது இன்று அவர்களுடன் இணைந்து இந்த சட்டத்தினை நீக்கவேண்டும் என்று போராடிவருகின்றோம். கடந்த 25 நாட்களுக்கு மேலாக இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி காங்கேசன்துறை தொடக்கம் ஹம்பாந்தோட்டை வரையில் கையெழுத்துப்போராட்டத்தினை செய்திருந்தோம். அந்த போராட்டத்தில் பெரும்பான்மை சமூகத்தினை சேர்ந்தவர்களையும் இணைத்தே முன்னெடுத்தோம். இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் மற்றும் அதன் ஏற்பாட்டாளரான தேரர் போன்றவர்கள் 50 நாட்களுக்கு மேலாக தடுத்துவைத்துள்ளவர்கள் உடனடியாக விடுதலைசெய்யப்படவேண்டும்

# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி

இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25039 | ப + க | 1985**
மானிப்பாய் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 01

**21792 | வே | 1993**
மானிப்பாய் | இந்து | Diploma
Medical Executive
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**21957 | வே | 1991**
வேலணை | இந்து | BSc
Quantity Surveyor
திருவாதிரை (மிதுனம்)
170 செ.மீ | செவ்: 12

**21903 | வே | 1993**
மூளாய் | இந்து | BSc
IT Trainee
பூசம் (கடகம்)
170 செ.மீ

**24619 | வே | 1990**
யாழ்ப்பாணம் | கத்தோலிக்கம்
BD | Team Leader
சுவாதி (துலாம்)
170 செ.மீ

**21855 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | A/L
Associate Manager
பூரட்டாதி (கும்பம்)
175 செ.மீ

**25069 | வே | 1986**
பருத்தித்துறை | இந்து | BA
CIMA | Accountant
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 08

**21795 | வே+கோ | 1995**
கோப்பாய் | இந்து | A/L
Cashier | ஜேர்மனி
பூரம் (சிம்மம்)
167 செ.மீ | செவ்: 12

**24955 | சா | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Own Business
சித்திரை (துலாம்)
187 செ.மீ

**23851 | வே | 1976**
அச்சுவேலி | இந்து | A/L
Own Business
சுவாதி (துலாம்) | Canada
172 செ.மீ | சூ.செவ்: 04

**22549 | வே | 1988**
காரைநகர் | இந்து | B.Eng
Mechanical Engineer
கார்த்திகை (ரிஷபம்)
165 செ.மீ

**25048 | வே | 1991**
கோப்பாய் | இந்து | Master
Degree | Banker
சித்திரை (கன்னி)
177 செ.மீ | சூ.செவ்: 06

**22230 | வே | 1988**
கொக்குவில் | இந்து
Diploma | Receptionist
சுவாதி (துலாம்) | France
167 செ.மீ | செவ்: 02

**22224 | வே | 1988**
திருநெல்வேலி | இந்து | BSc
Exe.Mechanical Engineer
கேட்டை (விருச்சிகம்)
170 செ.மீ | Singapore

**21912 | வே | 1990**
கொக்குவில் | இந்து | MSc
Software Engineer
திருவோணம் (மகரம்) | ஜேர்மனி
180 செ.மீ | Divorced

**22179 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | HNDM
Reagional Manager
உத்தராடம் (தனுசு)
192 செ.மீ | செவ்: 04

**21996 | வே | 1990**
நெல்லியடி | கத்தோலிக்கம்
BSc | Engineer
187 செ.மீ

**22068 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | BSc
Software Engineer
மகம் (சிம்மம்)
180 செ.மீ | செவ்: 04

**21891 | வே | 1992**
காரைநகர் | இந்து | BSc
Software Engineer
பூரட்டாதி (மீனம்) | USA
186 செ.மீ | செவ்: 07

**22146 | வே | 1993**
வேலணை | இந்து
BSc | Lecturer
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | செவ்: 04

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**22264 | கோ | 1987**
கரவெட்டி | இந்து | Msc
Civil Engineer
பூரட்டாதி (கும்பம்)
160 செ.மீ

**21711 | வே | 1990**
நல்லூர் | இந்து
MBBS | Doctor
சதயம் (கும்பம்)
162 செ.மீ

**21645 | கோ | 1996**
புளியங்கூடல் | இந்து | A/L
Pharmacy Assistant
உத்தரம் (சிம்மம்)
165 செ.மீ

**22261 | வே | 1996**
ஈச்சமோட்டை | RC | Diploma
Accounts Assistant
சுவாதி (துலாம்)
157 செ.மீ | செவ்: 12

**22164 | வே | 1998**
காரைநகர் | இந்து | A/L
Student (BSc)
திருவாதிரை (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**22258 | கு | 1987**
முல்லைத்தீவு | இந்து | MBBS
MD | Doctor
மகம் (சிம்மம்)
164 செ.மீ

**22167 | சா | 1991**
பண்டத்தரிப்பு | இந்து | BA
Development Officer
பூரம் (சிம்மம்)
165 செ.மீ | சூ.செவ்: 09

**21882 | வே | 1992**
மீசாலை | இந்து | BD
Regulatory Affairs
Specialist | மகம் (சிம்மம்)
160 செ.மீ | France | செவ்: 02

**21831 | வே | 1995**
திருநெல்வேலி | இந்து
A/L | Junior Executive
கேட்டை (விருச்சிகம்)
146 செ.மீ | செவ்: 01

**22053 | தே | 1992**
மாத்தளை | இந்து
BD | PGD | Doctor
உத்தரம் (கன்னி)
157 செ.மீ | செவ்: 08

**21966 | கு | 1988**
காங்கேசன்துறை | இந்து
MBBS | Doctor
சுவாதி (துலாம்)
152 செ.மீ | செவ்: 02

**21675 | கு | 1992**
பருத்தித்துறை | கத்தோலிக்கம்
A/L | Teacher
மிருகசீரிடம் (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**21738 | கோ | 1992**
கரவெட்டி | இந்து | PD
Lab Incharge | UK
உத்தராடம் (மகரம்)
172 செ.மீ | செவ்: 12

**25075 | வா.செ | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Diploma | Teacher
மகம் (சிம்மம்)
174 செ.மீ

**22101 | கோ | 1995**
மூளாய் | இந்து | MBBS
Lecture & Consultant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 12

**22657 | வே | 1991**
கொக்குவில் | இந்து
Student (Music course)
ரேவதி (மீனம்)
162 செ.மீ

**25036 | அ | 1993**
கொழும்பு | இந்து | Diploma
Senior Business Analyst
அத்தம் (கன்னி)
162 செ.மீ

**25006 | இ.வே | 1993**
அளவெட்டி | இந்து
BSc | Nurse | UK
உத்தரட்டாதி (மீனம்)
158 செ.மீ

**22206 | கோ | 1993**
அச்சுவேலி | இந்து
A/L | Job Seeker
சதயம் (கும்பம்)
157 செ.மீ | செவ்: 01

**21930 | கோ | 1999**
அல்லவை | இந்து
ACCA | Executive
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 12

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# 600 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி வைப்பு



**எஸ்.சபேசன்**

பட்டிருப்பு கல்விவலயத்தில் உள்ள மண்முனை தென் எருவில் பற்று கோட்டத்தின் சிறுவர் தினநிகழ்வு வெள்ளிக்கிழமை பட்டடிருப்பு கல்விவலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் செ.மகேந்திரகுமார் அவர்களது தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்துகொண்ட 600 மாணவர்களுக்கான பரிசுப்பொருட்களை 75 ஆயிரம் ரூபா செலவில் எருவில் கல்வி சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஸ்தாபகத் தலைவர் சமூகசேவகர் தமிழரசுக் கட்சியின் எருவில் வட்டாரத்தின் பிரதித் தலைவர் அ.வசிகரன் அவர்களது அனுசரணையில் எருவில் கல்வி சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஊடாக. பரிசுப்பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன இந்நிகழ்வில் எருவில் கல்வி சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஸ்தாபகத் தலைவர் சமூகசேவகர் தமிழரசுக் கட்சியின் எருவில் வட்டாரத்தின் பிரதித் தலைவர் அ.வசிகரன் பட்டிருப்பு வலயத்தின் ஆரம்பப் பிரிவுக்கான உதவிக்கல்விப்பணிப்பாளர் தயாளசீலன் சமூகவிஞ்ஞானப் பாடத்திற்குப் பொறுப்பான உதவிக் கல்விப்பணிப்பாளர் செ.சுரேஷ் மற்றும் அதிபர்கள் ஆசிரியர்கள் எருவில் கல்வி சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஆலோசகர் தாசன் பொருளாளர் புஸ்பநாதன் செயலாளர் ஆசிரியர் இ.ஜீவராஜ் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்,

# செட்டியூர் சிந்தனை பித்தன் புவிதரனுக்கு சிறந்த கவிஞருக்கான விருது




தமிழ் **Letter** ஊடக அமைப்பின் சமூகப் பணியும் பொறுப்புக்கூறலுக்குமான விருது வழங்கல் விழாவில் தமிழர் வாழ்வியல் பண்பாட்டு விழுமியங்களை உலகறியச் செய்தல் என்னும் பிரிவின் கீழ் சிறந்த கவிஞருக்கான விருதினை செட்டியூர் சிந்தனை பித்தன் மயில்வாகனம் புவிதரன், பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான கௌரவ றிசாட் பதியூர்தீன் இடமிருந்து பெற்றுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எம். கோபாலரெத்தினம் உள்ளிட்ட் பல பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தானர். இதன்போது, வைத்தியத் துறை, பொறியியல் துறை, சட்டத்துறை, சமூக சேவை, வாழ்வாதார மேம்பாடு, பேரிடர்காப்பு, சமாதானம், நல்லிணக்கம், விளையாட்டு, கலை துறை, எழுத்திலக்கியம் முதலான துறைகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது






இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அருளானந்தம் உமா மகேஸ்வரன் உயர் பதவிக்காக விடைபெறுவதையிட்டு, வடக்கு மாகாண இந்துகலாசார பிராந்திய அலுவலகத்தில், பிரபல ஆன்மீகவாதி ஆறுதிருமுருகன் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்ற போது.... **படங்கள் : வி.ரி.சகாதேவராஜா**



நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES



# செங்கலடி - வாசன் பாலர் பாடசாலையின் சிறுவர் தின நிகழ்ச்சி







**(செங்கலடி நிருபர் சுபா)**

மட்டக்களப்பு – செங்கலடி வாசன் பாலர் பாடசாலையில் சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி சிறுவர் தின நிகழ்வு இன்று மிகவும் சிறப்பாக பாடசாலையின் வளாகத்தில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

வாசன் பாலர் பாடசாலையின் அதிபர் து.சுபாஸ்சந்திரநாதன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக வாழைச்சேனை கல்குடா கல்விவலய உதவிக்கல்விப் பணிப்பாளர் கோ.ஜீவாகரன் மற்றும் மட்டக்களப்பு பாலர் பாடசாலையின் கல்விப்பணியக வெளிக்கள உத்தியோகத்தர் திருமதி வி.கயல்விழி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்திருந்ததுடன் கௌரவ அதிதியாக திரு.எம்.எம்.சர்யூன் அவர்களும் சிறப்பு அதிதிகளாக வாசன் பாலர் பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி.ர.ரேணுகா ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில் மாணவர்களினால் சிறப்பான முறையில் அதிதிகள் மாலை அணிவிக்கப்பட்டு பாஃன்ட் வாத்தியம் இசைத்தவாறு வரவேற்கப்பட்டனர். மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்களினால் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்ட கலை நிகழ்வுகள் இடம்பெற்துடன், மாணவர்களுக்கான பரிசல்களும் நினைவுச்சின்னங்களும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டது. மேலும் மாணவர்களை சிறப்பாக கற்பித்து வழிநடத்தும் ஆசிரியர்களுக்கான நினைவுப்பரிசில்களும் பெற்றோர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கிவைக்கப்பட்டன.

இதன் போது கருத்து தெரிவித்த வாழைச்சேனை கல்குடா கல்விவலய உதவிக்கல்விப் பணிப்பாளர் கோ. ஜீவாகரன் மாணவர்களில் நிகழ்ச்சிகள் அனைத்தும் உண்மையிலையே மிகச்சிறப்பாக அமைந்திருந்தது. திறம்பட இம் மாணவர்களை ஆசிரியர்கள் பயிற்றுவித்துள்ளனர். இம் மாணவர்களின் எதிர்காலம் சிறக்கும் என்பதை இவர்களின் திறன்ளை பார்க்கும் போது தெரிகின்றது. இப் பாடசலையில் பெற்றோரின் பங்களிப்பு இன்னும் அதிகமாகக்காணப்படால் மாணவர்கள் இன்னமும் ஊக்குவிக்கப்படுவர். எனவும் தெரிவித்தார்.

# பிரதான முகவராக செயற்பட்ட சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணை



**பாறுக் ஷிஹான்**

ஹெரோயின் போதைப்பொருள் பிரதான முகவராக செயற்பட்ட சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து வெள்ளிக்கிழமை (7) அதிகாலை 2.30 மணியளவில் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்முனை மதிரஸா வீதியில் வைத்து சந்தேக நபர் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் கல்முனைகுடி பகுதியை சேர்ந்த 34 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேக நபர் வசம் இருந்து ஹெரோயின் போதைப்பொருள் 7 கிராம் 870 மில்லிகிராம் உட்பட சந்தேக நபர் பாவித்த கைத்தொலைபேசி என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இச்சோதனை நடவடிக்கையின் போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி வேவிடவிதான ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்னாயக்க மேற்பார்வையில் உப பொலிஸ் பரிசோதகர் எச்.ஜி.பி. கே நிஸ்ஸங்க உள்ளிட்ட பொலிஸ் சார்ஜன்ட்களான திசாநாயக்க (53534) கண்டப்பகல (75492) பொலிஸ் கன்டபிள்களான பெரேரா (71664) அபேரட்ன (75812) நிமேஸ்(90699) சாரதி ஜெயரட்ன (19786) அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தனர்.

பின்னர் கைது செய்யப்பட்ட நபர்கள் சான்று பொருட்களுடன் கல்முனை தலைமையக பொலிஸ ாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. இச்சம்பவத்தில் தொடர்பு பட்ட சந்தேக நபர் இப்பிராந்தியத்தில் போதைப்பொருள் பிரதான முகவராக செயற்பட்டு வந்துள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

# முறக்கொட்டாஞ்சேனை மாணவன் தேசிய மட்டத்திற்கு தெரிவு



**(செங்கலடி நிருபர் சுபா)**

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட முறக்கொட்டான்சேனை இ.கி.மி. வித்தியால மாணவன் மாகாண மட்டத்தில் ஈட்டி எறிதல் போட்டியில் 1ம் இடம்பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். திருகோணமலை – கந்தளாய் லீலாரத்ன பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிழக்குமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளப் போட்டி–2022 பேட்டிகளில் மட்ஃகது முறக்கொட்டான்சேனை இ.கி.மி. வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் தவராஜா பிராத்தனன் 20வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுளார். இவரது இவ் வெற்றி பாடசாலைக்கும் பாடசாலைச்சமுகத்திற்கும் பெருமையைச் சேர்த்துள்ளமையுடன், மாணவனுக்கும் பாடசாலைக்கும் பயிற்றுவிப்பாளர்களுக்கும் பாராட்டுக்களும் குவிகின்றன.

# பண்ணிசை, பரதநாட்டியம் உள்ளிட்ட ஆறு கலைப்பயிற்சி நெறிகளுக்கு வித்தியாரம்பம்



**(வி.ரி.சகாதேவராஜா)**

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு பிரதேச செயலகமும் சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடாத்திய நவராத்திரி விழாவின் இறுதி நாளான விஜயதசமி அன்று வித்தியாரம்பம் சிறப்பாக நடைபெற்றது. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இந்துசமய கலாசார கற்கை நிறுவகத்தின் சுவாமி விபுலாநந்தர் பயிற்சி நிலையத்தினால் அடிப்படை சான்றிதழ் பயிற்சிகளுக்கான வித்தியாரம்ப நிகழ்வு இடம்பெற்றமை விஷேட அம்சமாகும்.

பண்ணிசை, பரதநாட்டியம், கதாப்பிரசங்கம் வயலின் ,வீணை, சொற்பொழிவு ஆகிய கலைப் பயிற்சி வகுப்புகளுக்கான வித்தியாரம்பம் விபுலானந்த அடிகளாரின் மணி மண்டபத்தில் அந்தந்த வளவாளர்களால் மேற்கொள்ளப்பட்டன. பெருந்திரளான மாணவர்கள் இக்கலைப் பயிற்சி வகுப்புகளில் பயில ஆர்வத்துடன் இணைந்ததைக் காணமுடிந்தது. இறுதிப்பூசை நிகழ்வுகள் இந்து கலாசார உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான சகல ஏற்பாடுகளையும்இந்துகலாச்சாரஉத்தியோகத்தர் கு.ஜெயராஜி மேற்கொண்டிருந்தார்.




# லீடர் ஜூனியரில் ஆசிரியர் தின நிகழ்ச்சி





**(வி.ரி.சகாதேவராஜா)**

இறக்காமம் லீடர் ஜுனியர் பாடசாலையில் சர்வதேச ஆசியர் தின நிகழ்ச்சி அதிபர் நிஹால் உமறுகத்தா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.கபூர் மற்றும் கௌரவ அதிதிகளாக ஆசிரியர் ஆலோசகர்களான ஏ.எம். கியாஸ், யூ.எல்.ஜெபீர் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

ஆசிரியர்களுக்கான அன்பளிப்பு பொருட்களுக்கான அனுசரணையை ஏ.ஏ. முகம்மது சஜ்ரீன் அவர்களாலும் மாணவர்களுக்கான விருந்துபசாரம் ஏம்.எஸ். றிஸ்மி, எம்.ஏ.எம்.இத்ரீஸ் ,ஏ.எம்..அன்சார் ஹாஜியார் ஆகியோர் அனுசரணை வழங்கி நிகழ்வை கௌரவித்தனர். மாணவர்களின் கண்கவர் நிகழ்ச்சிகள் மேடையேறின.





Arunthathee Presents
மாற்று மோதிரம்
# BRIDAL FASHION SHOW
EAST 2022

OCT 15 2022
ANJANA GRAND PLACE BATTICALOA

## Bridal Fashion Show and Cake Exhibition



Contact us 076 9759197

| Main Sponsor | Co Sponsor | Official Sraee Blouse Partners | Official Photography & Videography | Official Sraee Florist Partner |
|---|---|---|---|---|
| MUBARAK® TEXTILES | AZEEF FANCY | Mahalaxmi Boutique; RS Designer – Design Your Special Days | INNOVO STUDIO – Cinematography, Photography, leading in professional | Shan Party professionals – Event Planning & Designer Decor |

Media Partner
தினகரன் · Daily News · SUNDAY OBSERVER · வசந்தம் TV · வசந்தம் FM

# மட்டுநகரில் அருந்ததி வழங்கும்
# BRIDAL FASHION SHOW & CAKE EXHIBITION

2014 ஆம் ஆண்டு அருந்ததி தனியார் நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து இன்று வரை திருமண த்தோடு தொடர்புடைய பலதரப்பட்ட துறைகளில் காலடி பதித்து திருமணங்களில் தனக்கென்றவொறு தனியிட த்தைப் பிடித்துள்ளது. அசைக்கமுடியாத பலமான அஸ்திவாரத்தோடு புது புது விடயங்களை அறிமுகம் செய்து நவீன காலத்திற்கேற்றவவாறு தம்மை பதிவேற்றம் செய்துகொண்டிருக்கிறது.

50 இற்கும் மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்களுடன் இணைந்து பல்வேறு ஊடக, புகைப்பட, ஆடை அலங்கார மற்றும் Aari Work அனுசரைணயாளர்களின் ஒத்துழைப்போடு தனித்துவமாய் நடைபெறும். ஏராளமான பார்வையாளர்களோடு பலரின் எதிர்பார்ப்புகளோடு இதுவரையில் எந்தவொரு நிறுவனமும் ஏற்பாடு செய்திராத மணப்பெண் அலங்காரக் காட்சியை பல இடங்களிலும் நடாத்துவதே அருந்ததியின் குறிக்கோள்.

அந்த வகையில் 2022 கடந்த ஜனவரி 10 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் மார்ச் 10ம் திகதி யாழ்ப்பாணத்திலும் மிகப் பிரம்மாண்டமாக இம் மாற்றுமோதிரம் நிகழ்வு நடைபெற்றது.

**மணப்பெண் அலங்காரக் காட்சி**
**கேக் கண்காட்சி**
**15 ஒக்டோபர் 2022**
**அஞ்சனா கிரேண்ட் பெலஷில்**

இந்த சிறப்பு நிகழ்வானது ஒவ் வொரு மாவட்டத்திலுமுள்ள பெண் முயற்சியாளர்களை இந்த சமூதாயத்திற்கு அறிமுகப்படுத்தும் முயற்சியாக மீண்டுமொரு மாற்று மோதிர நிகழ்வை நடாத்த அருந்ததி நிறுவனம் திட்டமி ட்டுள்ளது. அந்த வகையில் பலரின் நன்மதிப்பையும் நேர்மறையான கருத்துக்களையும் பெற்று வெற்றிப் பாதையில் பயணித்துக்கொண்டிருக்கும் மணப்பெண் அலங்காரக் காட்சி மாற்றுமொரு பிரம்மாண்டத்தோடு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி மட்டகளப்பு அஞ்சனா கிரேண்ட் பெலஷில் நடைபெறவுள்ளது. பிரதம மற்றும் சிறப்பு அதிதிகளின் வருகையோடு பல பிரதேசங்களில் இருந்தும் சிறப்பு தேர்ச்சி பெற்ற அழகுக்கலை நிபுணர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர். எதிர்பார்ப்புகளோடு வரும் அனைவரையும் நிச்சயம் இந் நிகழ்வு திருப்திபடுத்துமென்பதில் எவ்வித ஐயமுமில்லை..

## அழகுக்கலை நிபுணர்கள்




## கேக் வடிமைப்பாளர்கள்



# பேசாலையிருந்து முதல் அருட்சகோதரர் புனித டிலாசால் சபைக்கு

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறைமாவட்டத்தில் மூத்த பங்கும் கத்தோலிக்கர் செறிந்து வாழும் பங்காகிய பேசாலை பங்கிலிருந்து முதலாவது டிலாசால் அருட்சகோதராக நவசந்நியாசத்தில் இணைக்கப்பட்டுள்ளார். மன்னார் மாவட்டத்தில் நீண்ட காலமாக புனித டிலாசால் சபையானது மன்னார் மாவட்டத்தில் கல்வி பணியுடன் மன்னார் மாவட்ட மாணவ சமூகத்தில் கல்வி ஒழுக்கம் விளையாட்டு மற்றும் இறை பக்தி போன்ற செயல்பாட்டில் ஈடுபட்டு வருகின்றது. இதனால் இவ் மாவட்டத்தில் அன்று தொட்டு இன்று வரை இவ் சபையில் இளைஞர்கள் இணைந்து தங்கள் சேவைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த வரிசையில் பேசாலையிலிருந்து இவ் சபைக்கு முதன்முறையாக ஒருவர் இணைந்து தனது நவசந்நியாசியாக இணைக்கப்பட்டுள்ளார். பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயப் பங்கைச் சேர்ந்தவரும் பேசாலை 8ம் வட்டாரத்தைச் சார்ந்த திரு பீற்றர் றெவ்வல் திருமதி கமலி மிராண்டா ஆகியோரின் மகன் அருட்சகோதரர் திவ்வியன் றெவ்வலே சனிக்கிழமை (08.10.2022) காலை முட்டுவெல புனித வளனார் ஆலயத்தில் நடைபெற்ற திருச்சடங்கின் ஊடாக இவர் சபைக்குரிய ஆடை அணிவிக்கப்பட்டு தனது நவசந்நியாசத்தில் இணைக்கப்பட்டுள்ளார்



இவர் ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை மன் பேசாலை புனித பற்றிமா தேசிய பாடசாலையில் கற்றவராவார். இவரின் கல்வி ஒழுக்கம் போன்ற நற்செயல்களை இனம் கண்ட இவ் பாடசாலையில் அதிபராக கடமையாற்றி வந்த டிலாசால் சபையைச் சார்ந்த அருட்சகோதரர் ஸ்ரணி அவர்களால் இவர் இவ் சபையில் இணைவதற்காக அனுப்பப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவருடன் இன்றையத் தினம் (08) மன்னார் மாவட்டத்தில் வங்காலையிலிருந்து அருட்சகோதரர் நிலோசன் மற்றும் பெரிய பண்டிவிரிச்சானிலிருந்து அருட்சகோதரர் அபிஷன் ஆகிய இருவரும் அருட்சகோதரராக இவ் சபையில் நவசந்நியாசத்தில் இணைந்தள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இராணுவத்திடமிருந்து எமது காணிகளை மீட்டுத் தாருங்கள் - அகதி முகாம் மக்கள்




(வாஸ் கூஞ்ஞ)

எமது பூர்வீக குடியிருப்பு காணிகளை இராணுவத்திடமிருந்து மீட்டு அங்கு நாங்கள் மீள் குடியேற எங்களுக்கு வழி சமைத்து தாருங்கள் என 35 வருடங்களாக அகதிகள் முகாம்களில் வசித்து வரும் யாழ் பொலிகண்டி மக்கள் இவ் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். மன்னார் மெசிடோ நிறுவனத்தால் யாழ் பருத்தித்துறை பொலிகண்டி நலன்புரி நிலையங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு சனிக்கிழமை (08.10.2022) காலை 10 மணியளவில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் (மெசிடோ) பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ அவர்களின் தலைமையில் அவர்களின் நிறுவனத்தால் வழங்கி வைக்கப்பட்டது

இலங்கையில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக பலாலிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து கடந்த 35 வருடங்களுக்கு மேலாக யாழ் பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பொலிகண்டி கிராம சேவையாளர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள சின்னவலைஇ பாலாவிஇ நிலவன்இ ஆகிய அகதிகள் முகாமில் வசிக்கும் வருமானத்தை இழந்து நிற்கும் 75 குடும்பங்களுக்கான உலருணவுப் பொருட்களே வழங்கி வைக்கப்பட்டன. இவ்வேளையில் இவ் அகதி முகாம்களில் வசிக்கும் மக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கையில்

யுத்தம் காரணமாக பலாலிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வந்த நாங்கள் இங்கு தனியார் காணிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளோம் காணி உரிமையாளர்கள் தங்களது காணிகளை விட்டு விலகுமாறு வற்புறுத்துகின்றார்கள் எங்களது சொந்தக் காணிகளை இலங்கை இராணுவம் ஆக்கிரமித்து பலன் தரும் மரக்கன்றுகளை உருவாக்கி அனுபவித்து வருகின்றார்கள் ஆனால் நாங்கள் அனாதைகளாக ஓலைக் குடிசைகளில் மழை வெள்ளத்திற்குள் சுகாதார சீர்கேடுகளுடன் வாழ்ந்து வருகின்றோம். எனவே இலங்கை ஜனாதிபதி அவர்கள் தலையிட்டு இராணுவத்தினரிடமிருந்து எமது காணிகளை மீட்டு எமது மீள் குடியேற்றத்திற்கு உதவி செய்ய வேண்டும் என்று இவ் அகதி முகாம்களில் வசிக்கும் மக்கள் தங்கள் கோரிக்கையாக முன்வைத்திருந்தனர்.

# அந் நூர் தேசிய பாடசாலையின் சாதனையாளர் விழா














எஸ்.எம்.எம்.முர்ஷித்.

வாழைச்சேனை அந் நூர் தேசிய பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சாதனையாளர்களையும் அவர்களது பெற்றோர்கள் மற்றும் கற்பித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் முப்பெரும் விழா கல்லுரி மண்டபத்தில் இடம் பெற்றது. கல்லூரியின் முதல்வர் ஏ.எம்.எம்.தாஹிர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் பணிப்பாளர் டாக்டர் எஸ்.எம்.எம்.எஸ்.உமர் மௌலானா கலந்து கொண்டதுடன் அதிதிகளாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி எம்.ஏ.சி.றமீஸா, பிரதி கல்வி பணிப்பாளர்களான திருமதி எம்.ஜே.றிப்கா, எம்.எச்.எம்.றமீஸ், வீ.ரீ.அஜ்மீர், திருமதி ஜே.தாஜ•ன் நிஸா, உதவி கல்வி பணிப்பாளர் எம்.ஐ.அஹ்சாப், கல்லூரியின் முன்னாள் அதிபர் யூ.அஹமட், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எம்.எஸ்.எம்.அன்வர் மற்றும் பிரதேச பாடசாலைகளின் அதிபர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

கல்லூரியின் வரலாற்றில் முதல் தடவையாக மருத்துவ பீடம், பொறியீயல் பீடம், சட்ட கல்லூரி ஆகியவற்றுக்கு தெரிவான மாணவர்களும் 2020 மற்றும் 2021 ஆண்டு பல்கலை கழகத்திற்கு தெரிவான மாணவர்களும் அவர்களது பெற்றோர்கள் கற்பித்த ஆசிரியர்கள், அதிதிகள் ஆகியோருக்கு கல்லு10ரி நிருவாகத்தினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் கல்லூரியின் அதிபர் ஏ.எம்.எம்.தாஹிரின் சேவையை பாராட்டி வாழ்த்து மடல் வழங்கப்பட்டதுடன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். இதன் போது அதிதிகளும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான சாதனையாளர்களும் பேன்ட்வாத்திய இசையுடன் ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டதுடன் நிகழ்வில் கல்லூரி மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.






# ஊடாடும் சந்திப்பும், கடமை பொறுப்பேற்பும்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

மனித மேம்பாட்டு அமைப்பின் உயர்பீட உறுப்பினர்களின் முதற்கட்ட ஊடாடும் சந்திப்பும், கடமைகளைப் பொறுப்பேற்கும் நிகழ்வும் அமைப்பின் உத்தியோகபூர்வ இல்லத்தில் (06) நடைபெற்றது. அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் எஸ்.ஏ. முஹம்மட் அஸ்லம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அமைப்பின் ஆலோசகரும், ஊடக நிருபருமான எம்.ஐ. சம்சுதீன், அமைப்பின் செயலாளர் டபிள்யூ. ஷவ்தப் உசைம், பொருளாளர் யூ.எல்.எம்.ஜெஸ்மீர் , உப தலைவர் ஜே.எம். ஐ/தாப் , உப செயலாளர் ஏ.எல்.எம்.அஸ்னி அகீல், பொது அமைப்பாளர் ஏ.ஜே.எம். றிக்காஸ் மற்றும் ஊடக ஒருங்கிணைப்பாளர் எச்.எம். ஹிசாம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது உயர்பீட உறுப்பினர்களின் கடமைகள் பற்றி கலந்துரையாடப்பட்டு, செயலாளரின் கையெழுத்திடப்பட்ட கடமைச் சான்றிதழ்கள் அமைப்பின் ஸ்தாபகத் தலைவரினால் உயர்பீட உறுப்பினர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# மருதமுனையில் தரமுயர்த்தப்பட்ட ஆய்வுகூடம்

நூருள் /ஹுதா உமர்

அம்பாறை மாவட்ட, மருதமுனை பிரதேச வைத்தியசாலையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் அவர்களுக்கான வரவேற்பு நிகழ்வும் வைத்தியசாலையின் ஆய்வுகூடத்தை தரமுயர்த்தும் வைபவமும் 2022.10.08 ஆம் திகதி இடம்பெற்றது



மாவட்ட வைத்திய அதிகாரி டாகடர் ஏ.எல்.எம். மிஹ்லார் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் பிரதம அதிதியாகவும் கல்முனை சுகாதார பணிமனையின் பிரதி பணிப்பாளர் டாக்டர் எம்.பி.அப்துல் வாஜித் கௌரவ அதிதியாகவும் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம். மாஹிர் விசேட அதிதியாகவும் தரமுகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் பி.ஜி.பி. டானியல் , சுற்றாடல் மற்றும் தொழில் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம். பௌசாத், தொற்றா நோய்த் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம்.எஸ். இர்ஷாத், ஆயுள்வேத பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ. நபீல், பிராந்திய பற்சிகிச்சை நிபுணர் டாக்டர் எம்.எச்.எம்.ஸஃரூக், கணக்காளர் உசைனா பாரிஸ் பிராந்திய மருந்தாளர் இந்திரகுமார் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டிருந்தனர். மேலும் இந்நிகழ்வில் வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதிகள், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர், பொலிஸார், பிரதேச முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# 200 குடும்பங்களுக்கு உலருணவு வழங்கி வைப்பு




தலவாக்கலை பி.கேதீஸ்

இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளை ஊடாக சேவா அமெரிக்கா நிதியுதவியுடன் பெண் தலைமைத்துவம் ஏற்று நடத்தும் தெரிவு செய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன. இப்பொதிகள் அட்டன் பிரதேசத்தை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு தலா 35 கிலோ அரிசி மற்றும் 15 கிலோ மாவு அடிப்படையில் இப்பொதிகள் நேற்று (8) வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளையின் தலைவர் விஜயபாலன்ஜி, அதன் செயலாளர் காமதேவன்ஜி, சேவா சங்கத்தின் ஆசிய பிராந்தியங்களுக்கு பொறுப்பான இராதாகிருஸ்ணன்ஜி, இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளையின் இணைச் செயலாளர் சாந்தகுமார்ஜி ஆகியோர் இந்த பொதிகளை வழங்கிவைத்தனர்.

# அம்பாறை மாவட்டப் பணிப்பாளராக மீண்டும் நியமனம்





பைஷல் இஸ்மாயில் -

அகில இலங்கை YMMA பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளராக மீண்டும் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த எம்.ஐ.முஹம்மட் றியாஸ் அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். YMMA பேரவையின் கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுந்தினம் (07) நடைபெற்ற Exco கூட்டத்தின்போது அம்பாறை மாவட்டப் பணிப்பாளராக 2022 ஃ 2023 ஆண்டுகளுக்கு மீண்டும் நிரமிக்கப்பட்டு அவரின் நியமனக் கடிதத்தை பேரவையின் புதிய தேசியத் தலைவர் இஹ்சான் ஏ.ஹமீட் வழங்கி வைத்தார்.

# கொல்லநுலை பாடசாலையில் ஆசிரியர் தின நிகழ்ச்சி



மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வித்தியாலய அதிபர் மூ.சிவகுமாரன் தலைமையில் ஆசிரியர் தின நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்ற போது...

# வடகிழக்கில் ஏற்பட்ட யுத்தமே கல்வி பின்னடைவுக்கு காரணம் - அ.வசீகரன்

**எஸ்.சபேசன்**

வட கிழக்கில் கடந்த மூன்று தசாப்த காலமாக நடைபெற்று முடிந்த யுத்தத்தினால் தமிழ் மக்களது கல்வி சீரழிக்கப்பட்டதுடன் பாரிய பின்னடைவைச் சந்தித்த ஒரு சமூகமாகவே தமிழ்மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இந்நிலை மாற்றப்படவேண்டியது காலத்தின் தேவையாகும் என எருவில் கல்வி சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஸ்தாபகத் தலைவர் சமூகசேவகர் தமிழரசுக் கட்சியின் எருவில் வட்டாரத்தின் பிரதித் தலைவர் அ.வசீகரன் தெரிவித்தார் சமூகசேவகர் அ.வசிகரன் அவர்களது அனுசரணையில் எருவில் கல்வி சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஊடாக. பட்டிருப்பு கல்விவலயத்தில் உள்ள கண்ணகிபுரம் விநாயகர் வித்தியாலயத்தில் வாணிவிழாவினை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிநிகழ்வுகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை வித்தியாலய அதிபர் தே.இராஜசேகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் எருவில் கல்வி சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஆலோசகர் கா.தாசன் பாடசாலையின் பிரதி அதிபர் இ.ஜீவராஜ் பாடசாலையின் அபிவிருத்திச்சங்கத்தின் செயலாளர் ஜெகதீஸ்வரன் ஆன்மீக அதிதி கஜமுகன் சர்மா மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர். அவர் மேலும் பேசுகையில் கல்வி என்பது ஒரு இனத்தின் அடையாளம் ஒரு இனத்தினை முழுமையாக அழிக்வேண்டுமானால் கல்வியை அழித்தாலே அச்சமூகம் அழிந்ததற்குச் சமமாகும் இவ்வாறு கல்வி எவ்வளவு முக்கியம் என்பதனை எமது மாணவர்கள் புரிந்துகொண்டு கல்வியில் ஆர்வம் காட்டவேண்டும். நாம் இவ்வாறான உதவிகளைச் செய்வதன்நோக்கம் கல்வியில் நீங்கள் முன்னேறவேண்டும் என்பதற்கான ஊக்குவிற்பே இதனை உணர்ந்து நீங்கள் கல்வியில் சிறந்து விளங்கி சமூகத்தில் நற்பிரஜையாக வரவேண்டும் என்றார்

## போட்டோப்பிரதி இயந்திரம் மற்றும் கணனித் தொகுதிகள் வழங்கி வைப்பு



**எஸ்.சபேசன்**

சம்மாந்துறை கல்விவலயத்திற்குட்பட்ட 7 ஆம் கிராமம் சவளக்கடை கணேசாவித்தியாலயத்திற்கு போட்டோப்பிரதி இயந்திரம் மற்றும் கணணித் தொகுதிகள் வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை அதிபர் க.பேரானந்தம் அவர்களது தலைமையில் இடம்பெற்றது. நிந்தவூர் பிரதேசசபையின் பிரதித் தவிசாளர் யு.எல்.சுலைமான்லெப்பை அவர்களினது முயற்சியின் பயனால் போட்டோக்கொப்பி இயந்திரம் மற்றும் இரண்டு கணணித்தொகுதிகள் மற்றும் பிறின்டர் ஆகியவற்றை அவர் பாடசாலைக்கு நேரடியாக வருகைதந்து கையளித்துள்ளார்

இவ் உதவியினை வழங்குவதற்கு உதவிய பிரதித் தவிசாளர் யு.எல்.சுலைமான்லெப்பை அவர்களுக்குப் பாடசாலையின் அதிபர் க.பேரானந்தம் மற்றும் பாடசாலை சமூகம் நன்றி தெரிவித்துள்ளது

## வடக்கில் சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலை திறந்து வைப்பு



**( வி.ரி. சகாதேவராஜா)**

கிழக்கு மாகாணத்தில் காரைதீவில் பிறந்து வடக்கில் தடம் பதித்த உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலை இன்று வடக்கில் திறந்து வைக்கப்பட்டது. வரலாற்று பெருமை மிகு தருணம் இது. வடக்கையும் கிழக்கையும் ஆன்மீகத்தால் முத்தமிழால் கல்விப் பணிகளால் இணைத்தவர் ஈழம் தந்த சைவத்தமிழ்ப் பெரியார் சுவாமி விபுலானந்த அடிகளார். அவரது திருவுருவச் சிலை யாழில் முக்கிய நெடுஞ்சாலையான யாழ் – மானிப்பாய் – காரைநகர் வீதியில் யாழ் நுழைவாயலில் அமைக்கப்பட்டது. கிழக்கின் முதன்மை ஆதீனமான தென் கயிலை ஆதீனம் அகத்தியர் அடிகளாரால் இச் சிலை திறந்து வைக்கப்பட்டது..

# முனைக்காடு பாடசாலைகளின் ஆசிரியர் தின நிகழ்ச்சி









மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலய தேசிய பாடசாலை, சாரதா வித்தியாலயம் போன்ற இரு பாடசாலைகளின் ஆசிரியர் தின நிகழ்ச்சி நேற்று(08) சனிக்கிழமை முனைக்காடு தேசிய பாடசாலையில் நடைபெற்றது. தேசிய பாடசாலையின் அதிபர் மா.சத்தியநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், வலயக்கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம், மண்முனை தென்மேற்கு கோட்டக்கல்விப் பணிப்பாளர் மூ.உதயகுமாரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது, ஆசிரியர்கள் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டமையுடன், நினைவுச்சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# நபி முஹம்மத் ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்களின் பிறப்பை முன்னிட்டு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வெளியிடும் சிறப்புச் செய்தி

**(அஷ்ரப் ஏ சமத்)**

நபிகள் நாயகமே! உங்களை விட அழகான எவரையும் என் கண்கள் கண்டதே இல்லை. உங்களை விட அழகான யாரையும் பெண்கள் பெறவுமில்லை. அத்தனை குறைகளை விட்டும் பரிசுத்தமானவராக நீங்கள் படைக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் விரும்பியவாறு படைக்கப்பட்டது போன்றல்லவா இருக்கிறீர்கள்' என ஹஸ்ஸான் இப்னு ஸாபித் ரழியல்லா/ஹ அன்/ஹ இறைத்தூதர் ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்து வர்ணனை செய்தார்கள்.

சிறுவர் உரிமை, பெண்கள் உரிமை, மனித நேயம், இனங்களுக்கிடையிலான சமத்துவம், நல்லிணக்கம் என்பவற்றுக்காக அன்னார் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். எப்போதும் எல்லா நிலைமைகளிலும் நீதமாக நடந்துகொண்டதோடு ஏழை எளியோரை, அநாதைகளை அரவணைத்து வாழ்ந்தார்கள். பல்லின சமூகங்களையும் உள்ளடக்கிய 'மதீனா சாசனம்' எனும் நீதமான யாப்பை அறிமுகம் செய்தார்கள். சமயம், உலகியல் ஆகிய இரண்டிலும் ஒருசேர மகத்தான வெற்றியைப் பெற்றார்கள். எனவேதான் மனித வரலாற்றில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய மாமனிதராக அண்ணல் நபி ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்கள் அடையாளப்படுத்தப்படுகிறார்கள். அந்தவகையில் நபி ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்த ரபீஉனில் அவ்வல் மாதம் அலாதியான சிறப்பைப் பெறுகிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மீலாதுந் நபி தினம் எனப்படும் நபியவர்களின் பிறந்த தினமானது உலகளாவிய ரீதியில் மகிழ்ச்சியையும் சந்தோசத்தையும் வெளிப்படுத்தக்கூடிய உன்னதமான ஒரு நிகழ்வுக்குரிய தினமாகும்.

'ரபீஉன்' என்றால் வசந்தம் எனப்பொருள்படும். வசந்தகாலமானது பூமிக்கு அழகையும் ரம்மியத்தையும் பசுமையையும் செழிப்பையும் கொண்டுவருகிறது. அதுபோலவே ரபீஉனில் அவ்வல் மாதத்தில் பிறந்த எமது உயிரிலும் மேலான அன்பு நபி முஹம்மத் ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்கள் மானிட சமூகத்துக்கு தூதுத்துவ ஒளி, விடிவு, வெற்றி, விடுதலை, அமைதி, சுபீட்சம் என அகிலத்தார் அனைவருக்கும் இறையருளை, சர்வதேசத் தூதை சுமந்து வந்தார்கள். இதனை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. 'உலக மக்களுக்கு அருட்கொடையாகவே அன்றி உம்மை நாம் அனுப்பி வைக்கவில்லை'. (ஸ/றா அல் அன்பியா:107)

நபியவர்கள் மூலம் அல்லாஹ் நபித்துவத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தான். மறுமை வரைக்கும் மனித சமுதாயத்திற்கு நேர்வழி காட்டும் பொறுப்பை அன்னாரிடம் ஒப்படைத்தான். எனவே எம் பெருமானார் ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்கள் மனித வாழ்வின் அனைத்துப் பகுதிக்கும் வழிகாட்டும் ஏக வழிகாட்டியாகத் திகழ்ந்தார்கள். அம்மாமனிதரின் முழு வாழ்வுமே மனித குலத்திற்கான அழகிய முன்மாதிரிகளால் நிரம்பி வழிந்தன. இந்த உண்மையை அல்குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகின்றது. அல்லாஹ்வின் தூதரில் நிச்சயம் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கின்றது'. (ஸ/ரா அல் அஹ்ஸாப்: 21)

நபி ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்கள் மீது பற்றுவைத்தல் எனும்போது குறைந்தபட்சம் அவர்கள் மீது அதிகமதிகம் ஸலவாத்தும் ஸலாமும் சொல்லல், அவர்களின் பெயர் கூறும் போதும் பிறர் கூறக் கேட்கும் போதும் கண்ணியப்படுத்தி ஸலவாத் சொல்லல், அவர்களது குடும்பத்தவர்களை (அஹ்லுல்பைத்) கண்ணியப்படுத்தல், ஹதீஸ்களை கற்றுக்கொள்ளல், ஸ/ன்னாக்களை பேணுதலோடு நடைமுறைப்படுத்தல், நபிகளாரின் ஆளுமைப் பண்புகளை புரிந்துகொள்ளவும் படித்து விளங்கவும் நேரம் ஒதுக்குதல், அறியாத மக்களுக்கு அன்னாரை அறிமுகம் செய்தல் மற்றும் அவர்களை தவறாகப் புரிந்து வைத்திருப்பவர்களுக்கு அப்புரிதலைக் களைந்து, சரியான புரிதலை அவர்களுக்கு வழங்கி நபியவர்கள் மீதான நன்மதிப்பை ஏற்படுத்தல் என்பன அன்னாரின் சமூகத்தினர் என்ற வகையில் எமது கடமையும் பொறுப்புமாகும்.

எனவே நபி ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்கள் மீது எமது உயிரை விடவும் மேலாக நேசம் வைப்போம். அவர்களது வாழ்க்கையை ஆழமாகக் கற்றுக் கொள்வதோடு எமது பிள்ளைகளின் உள்ளங்களிலும் அவர்கள் மீதான அன்பையும் பற்றையும் விதைப்போம். அல்லாஹ் எம்மனைவரையும் இறுதிநாள் வரை நபி ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் காட்டித்தந்த வழியில் வாழச்செய்வதோடு அன்னாரோடு சுவனத்தில் ஒன்றாக வாழும் பாக்கியத்தையும் தந்தருள்வானாக.

**முப்தி எம்.ஐ.எம். ரிஸ்வி**
**தலைவர்**
**அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா**

**அஷ்ஷைக் எம். அர்கம் நூராமித்**
**பொதுச் செயலாளர்**
**அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா**

# கந்தளாயில் மீலாதுன் நபி விழா



**எப்.முபாரக்**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மீலாதுன் நபி விழாவினை முன்னிட்டு கந்தளாய் கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் ஏழுபது வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் கௌரவிக்கப்பட்டதோடு, சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கு உலருணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு கந்தளாய் கலை இலக்கிய பேரவையின் தலைவர் முஸ்தபா சகாப்தீன் அவர்களின் தலைமையில் இன்று(9) கந்தளாய் பேராற்றுவெளி ஜ/ம்ஆ பள்ளிவாயலில் நடைபெற்றன. இந்நிகழ்வில் கந்தளாய் பிரதேச செயலகத்தின் கலாச்சார உத்தியோகத்தர் நிமால் ஸ்ரீ பண்டார பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு,சமயத் தலைவர்கள்,பாடசாலை அதிபர்கள்,கல்வி அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

# தம்பலகாமத்தில் மீலாத் நபி விழா

**ஹஸ்பர்**

அகிலம் போற்றும் முஹம்மது நபி (ஸல்) அவர்களது பிறந்த தினத்தை முன்னிட்டு நாடளாவியரீதியில் இன்று (09) மீலாதுன் நபி விழா இடம் பெற்று வருகின்றன. இதனை கொண்டாடும் முகமாக தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை புஹாரி ஜு்ம்ஆ பள்ளிவாயலில் சர்வமத தலைவர்களின் பங்கேற்புடன் காலை 9.00 மணிக்கு பள்ளிவாசல் மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, தம்பலகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சம்பத் பண்டார ,பௌத்த மதகுரு,இந்து சமய குருக்கள்,பள்ளிவாயல் சம்மேளனத் தலைவர் எச்.தாலிப் அலி மௌலவிமார்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந் நிகழ்வின் போது முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு நற்பண்புகள் முதலான விடயங்கள் பேசப்பட்டன. தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை நீங்க விசேட துஆ பிரார்த்தனையும் இடம் பெற்றன. இதனையடுத்து வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. இதேவேலை முஹம்மது நபி (ஸல்) அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகளும் நடுகை செய்யப்பட்டன. இந்த நிகழ்வை முள்ளிப்பொத்தானை புஹாரி ஜு்ம்ஆ பள்ளிவாயல் நிருவாகத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.





# ஒக்டோபர் 09 ஆம் திகதி உலக அஞ்சல் தினம்

உலக தபால் தினம் ஒக்டோபர் 9 ஆம் திகதி சர்வதேச ரீதியில் கொண்டாடப்படுகிறது. இது முதன் முதலில் 1874 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி சுவிட்சர்லாந்தின் பேர்கன் நகரில் சர்வதேச அஞ்சல் ஒன்றியம் **(Universal Postal Union)** ஸ்தாபிக்கப்பட்டது. இதனை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும்



ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி உலக அஞ்சல் தினம் கடைபிடிக்கப்படுகிறது.

பேர்ன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட ஒக்டோபர் 9 ஆம் திகதியை அனைத்துலக அஞ்சல் தினமாக **(World Post Day)** பிரகடனப்படுத்துவதற்கு, 1969 ஆம் ஆண்டு டோக்கியோவில் இடம்பெற்ற சர்வதேச மாநாட்டின் போது தீர்மானிக்கப்பட்டது. 1984 ஆம் ஆண்டு ஹெம்பேர்க் மாநாட்டில் அனைத்துலக அஞ்சல் தினம், உலக அஞ்சல் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. 1798 இல் ஒல்லாந்தர்கள் தமது ஆட்சி காலத்தில் கடலோர பகுதிகளில் முதலாவது அஞ்சல் அலுவலகம் அமைத்தல் மற்றும் 1799 இல் முதன்முறையாக அஞ்சல் விதிமுறைகளை வெளியிடுதலுடன் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை அஞ்சல் சேவைக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலான நீண்ட வரலாறு காணப்படுகிறது.

தொழில்நுட்ப மற்றும் நிதி வரையறைகள் இன்றி மிகவும் நெருங்கிய மற்றும் மலிவு விலையில் தகவல் தொடர்பு சேவைகளை வழங்கும் அஞ்சல் சேவை குறித்து இன்னும் பெரும்பான்மையான மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். இலங்கை அஞ்சல் சேவையால் மக்களுக்கு ஆற்றப்படும் சேவை அளப்பரியதாகும். ஆண்டுகள் தோறும் விரிவாக்கப்படும் அஞ்சல் சேவையினூடாக உலகின் பல்வேறு பிரதேசங்களில் வசிக்கும் மக்களிடையே தொடர்பாடல் மாத்திரமின்றி பொருள் கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறுகிறது. பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து மக்களுக்கான சேவையை அஞ்சல் மூலம் வழங்குவதுடன், நவீன தொழில்நுட்பத்தினூடாக மிகவும் பயனுள்ள பல சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை காலத்திற்கு உகந்ததாகும்.

இணைய வர்த்தகம் **(e-commerce)> B- Post** ஆகிய முறைகளின் ஊடாக வெளிநாடுகளில் இருந்து பொருட்களை பாதுகாப்பாக இந்நாட்டிற்கு கொண்டுவருதல், சிறு மற்றும் நடுத்தர வர்க்க வர்த்தகர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியவற்றின் மூலம் உள்நாட்டு தொழில்முனைவோருக்கு ஆற்றும் சேவை விசாலமானதாகும். அஞ்சல்துறை என்பது மற்ற எல்லாத் துறைகளையும் விட சிறப்பான தொன்றாகும். இது மனித வாழ்வின் அங்கமாக தற்பொழுதும் விளங்கிக் கொண்டிருக்கிறது. அறிவியல் கருவிகள் கண்டுபிடிப்பதற்கு முன் செய்திக் கருவியாய் விளங்கியது அஞ்சல்துறைதான்.

ஆரம்ப காலத்தில் ஒருவர் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செய்திகளை அனுப்பப் பயன்பட்டது கடிதங்கள். அவை வெறும் காகிதங்கள் மட்டும் அல்ல. சில கடிதங்கள் காவியமாகவும், வரலாறாகவும் ஆகியுள்ளன. உத்தியோகப்பூர்வமான தகவல் பரிமாற்றங்களுக்கு இன்றும் அஞ்சல்முறை அவசியமாகின்றது. ஆரம்ப காலத்தில் தபால்களைப் போடுவதற்கு தபால்பெட்டிகள் பயன்படுத்தப்படவில்லை. கடிதங்களைக் கொண்டு செல்பவர்களே கடிதங்களைப் பெற்றும் வந்தனர்.

1653 ஆம் ஆண்டு லாங்குவிலே **(Longueville)** மாகாண மின்ஷ்டர் பாகுட் (**Minister Fouget)** என்ற தபால் அதிபரின் மனைவியின் யோசனையின் பேரில்தால் அஞ்சல் பெட்டி அறிமுகப்படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. அஞ்சல் பெட்டிக்கு மாதிரி வடிவத்தை சார்லஸ் ரீவ்ஸ் என்பவர் அமைத்துக் கொடுத்தார். சிவப்பு வண்ணத்தில் அஞ்சல் பெட்டிகன் வைக்கப்பட்டதன் காரணம் மக்களின் பார்வையை உடனடியாக ஈர்க்கும் சக்தி கொண்டதால் ஆகும். அஞ்சல் துறையில் எத்தனையோ நலத்திட்டங்கள் உள்ளன. இத்துறை உள்நாட்டு தொழில் முனைவோருக்கும் பொது மக்களுக்கும் ஆற்றும் சேவைகள் விசாலமானதாகும்.



**எம்.எம். அப்துல் முபாறக் (JP)**
**உப தபால் அதிபர்,**
**உப தபால் அலுவலகம்**
**ஆஸ்பத்திரி வீதி ,**
**சாய்ந்தமருது.**